அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குற்றவாளிகள் சிறையிலிருந்து, நீதிமன்றக் காவலில் இருந்து எடுக்கப்பட்டு, இப்போது அவர்கள் விசாரிக்கப்பட்டு வருகிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். மேலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய, அம்பத்தூரில் இருக்கின்ற அந்தச் சந்தன ஆலையை சோதனையிட்டு, தவறுகள் நடந்திருக்குமானால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சேகர்பாபு.

திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தவறுகள் யார் செய்தாலும், அதற்குண்டான தண்டனையைப் பெற்றுத் தருவதில் உறுதியான அரசாகச் செயல்படும் அரசு நீதி தேவதை மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரசு என்பதற்கு எடுத்துக்காட்டான சான்று இந்தச் சான்று. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, இந்தப் பிரச்சினையில் தொடர் நடவடிக்கை மேற்கொண்டதற்கு நன்றி தெரிவித்து அமர்கின்றேன்.

(எ) எடப்பாடி ஒன்றியம், ஆடையூர் சாலை – மதுரகாளியம்மன் கோயில் வரை தார்ச் சாலையைப் புதுப்பிக்கக் கோருதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதி 55-ன்கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த அடுத்த கவன ஈர்ப்பு. திரு. ஐ. கணேசன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. ஐ. கணேசன்.

திரு. ஐ. கணேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, எடப்பாடி ஒன்றியம், ஆடையூர் சாலை முதல் மதுரகாளியம்மன் கோயில் வரை உள்ள 1/2 கிலோமீட்டர் தார்ச் சாலை மிகவும் மோசமான நிலையில் பழுதடைந்துள்ளது. ஆகவே, அந்தத் தார்ச் சாலையைப் புதுப்பித்து போக்குவரத்திற்கு உதவுவதன் அவசியம் குறித்த” அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

2005 ஏப்ரல் 13]

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கான விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை

மேற்படி சாலையைத் தார்ச் சாலையாக்கி பத்து வருடங்கள் ஆகின்றன. தற்பொழுது தார்ப் பரப்பு முழுவதும் பழுதாகியுள்ளது. இச்சாலையினை ஓரடுக்கு ஜல்லி பரத்தல் செய்து தார்ச் சாலை அமைக்கத் தோராயமாக ரூ.7.50 இலட்சம் தேவைப்படும். இச்சாலையினைச் சீர் செய்ய போதிய நிதி இல்லாமையால் எந்தத் திட்டத்திலும் சேர்க்கப்படவில்லை. சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் அல்லது பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு பெற்று மேற்படி பணி முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஐ. கணேசன்.

திரு. ஐ. கணேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இந்த அவையிலே வைத்த விவர அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். அந்த விவர அறிக்கையிலே தற்பொழுது உள்ளாட்சியிலே அதைச் சீர்செய்வதற்குப் போதிய நிதி இல்லை. அதை உங்களுடைய சட்டமன்றத் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்திலே எடுத்துக்கொள்ளுங்கள் என்று ஒரு வேதனையான அறிக்கையை வைத்திருப்பதைக் கண்டு உள்ளபடியே நான் வேதனையடைகிறேன். உள்ளாட்சியிலே மட்டும் இந்த ஆண்டு 1,936 கோடியே 30 இலட்சத்து 33 ஆயிரம் ரூபாய் மூலதனக் கணக்கில் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கணேசன், என்ன வேண்டுமென்று கேளுங்கள்.

திரு. ஐ. கணேசன்: அதுதான். இல்லை, இவ்வளவு கோடி ரூபாயை உள்ளாட்சித் துறைக்கு வாங்கி, ஒரு சாதாரண 1/2 கிலோ மீட்டர்தான். அந்த மதுரகாளியம்மன் கோயில் என்பது எங்கள் பகுதியிலே மிகப் பெரிய, பிரசித்திப் பெற்ற கோயில். அந்தக் கோயிலுக்கு 1/2 கிலோ மீட்டருக்கு சாலை இல்லை, அதைப் புதுப்பித்துத் தாருங்கள் என்று ஒரு கவன ஈர்ப்பு கொடுத்திருக்கிறேன். அதற்கு அரசிடம் பணமில்லை, உங்கள் நிதியிலிருந்து போட்டுக்கொள்ளுங்கள் என்று சொல்லும்போது . . .

[2005 ஏப்ரல் 13

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கணேசன், என்னவென்று கேளுங்கள்.

திரு. ஐ. கணேசன்: என்னுடைய நிதி. உங்களைப் பார்த்துப் பேச வேண்டுமென்று சொல்கிறீர்கள். பிறகு அங்கே பார்த்துப் பேசுங்கள் என்று சொல்கிறீர்கள். என்னதான் சொல்கிறீர்கள்?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை. கேள்வியைச் சொல்லுங்கள்.

திரு. ஐ. கணேசன்: கேள்விதான் சொல்கிறேன். அந்த 1/2 கிலோ மீட்டர் நீளத்திற்கு 7.50 இலட்ச ரூபாயை தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ஒதுக்குங்கள் என்று சொல்கிறீர்கள். என்னுடைய தொகுதி மேம்பாட்டு நிதி, நீங்கள் கணக்கெடுத்துப் பாருங்கள். என்னுடைய தொகுதி மேம்பாட்டு நிதி அத்தனையுமே பள்ளிக்கூடத்திற்கு மட்டுந்தான், வருங்கால சமுதாயத்தை அறிவுள்ள சமுதாயமாக மாற்றுவதற்கு மட்டுந்தான் ஒதுக்கியிருக்கிறேனே தவிர (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கணேசன், என்ன கேள்வி என்று சொல்லுங்கள். (குறுக்கீடு) அமைச்சரிடம் என்ன கேள்வி என்று சொல்லுங்கள்.

திரு. ஐ. கணேசன்: இதுபோன்ற பாதைகளுக்கு ஒதுக்கவில்லை. ஆகவே, இந்தப் பாதையினுடைய முக்கியத்துவத்தை அமைச்சர் உணர்ந்து இந்தப் பாதையை புதுப்பிக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று உங்கள் மூலம் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12–20

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய ஆதங்கம் புரிகிறது. மாண்புமிகு தளி சட்டமன்ற உறுப்பினர் திரு. முரளிதரன் அவர்கள் சாலை வசதி மேம்படுத்த வேண்டுமென்று கேட்டவுடன், மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அந்த தளி தொகுதிக்குச் சென்று பார்வையிட்ட காரணத்தினால் அங்கே 20 கோடி ரூபாயை அறிவித்திருக்கின்றார்கள். மேலும், அவர் அருகிலே இருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணியினுடைய தொகுதியிலே மாண்புமிகு இதய தெய்வம்

2005 ஏப்ரல் 13] [திரு. கே.பி. அன்பழகன்]

புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 40 ஆண்டுகாலத்திற்கு முன்பாகவிருந்த சாலையை, அந்தச் சாலையை . . .

திரு. ஐ. கணேசன்: அதையெல்லாம் ஏன் சொல்லவேண்டும். நான் கேட்ட ரோடுக்கு பதில் சொல்லட்டும். நான் முதலில் கேட்ட கேள்வி . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர் பேசி முடிக்கட்டும் அவர். (குறுக்கீடு) முடிக்கட்டும். அவர் பேசி முடிக்கட்டும். பிறகு நீங்கள் கேளுங்கள். (குறுக்கீடு)

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: 8 கோடியே 5 இலட்சம் செலவில் மாண்புமிகு அம்மா அவர்கள் பெண்ணாகரத்திற்கு அருகேயிருந்து போரூர் இடத்திலிருந்து கேரட்டி செல்கின்ற சாலையை மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்து 70 கி.மீ. சுற்றிச் செல்கின்ற சாலையை 24 கி.மீ.-லே செல்கின்ற வாய்ப்பினை உருவாக்கிக் கொடுத்திருக்கிறார்கள். அப்படி தமிழகத்தினுடைய மக்களுடைய தேவையை அறிந்து இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் செயல்படுகின்ற இந்த நேரத்திலே, மாண்புமிகு உறுப்பினருடைய சட்டமன்ற உறுப்பினர் நிதியை எடுத்துக்கொண்டால் விரைவிலே செய்யலாம் என்ற நோக்கத்தோடுதான் சொல்லப்பட்டிருந்தது. இருப்பினும் அவர் கேட்கின்ற அந்த 1/2 கி.மீ. சாலையை கூடியவிரைவிலே ஒரு மாத காலத்திலே அமைத்துக் கொடுப்பதற்கு மாண்புமிகு அம்மாவினுடைய அரசானது முனைப்போடு செயல்பட்டு அந்தப் பணியை நிறைவேற்றுமென்பதைத் தெரிவித்து அமர்கிறேன். (குறுக்கீடுகள்)

திரு. ஐ. கணேசன்: பேச அனுமதிக்க வேண்டுமில்லையா அம்மா? நானாக எழுந்து பேசிவிட முடியுமா? நீங்கள் கூப்பிடவில்லை. என்ன, சொல்லட்டுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கணேசன், சொல்லுங்கள். நன்றி சொல்ல வேண்டுமா? சொல்லுங்கள்.

திரு. ஐ. கணேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தச் சாலையினுடைய முக்கியத்துவத்தைக் கருதி அமைச்சர் அவர்கள் ஒரு மாத காலத்திலே போட்டுக் கொடுக்கப்படும் என்று உத்தரவாதம் இந்த அவையிலே கூறியதன்பொருட்டு அவருக்கும், இந்த அரசுக்கும் என்னுடைய நன்றி.

(ஏ) விதி 55-ன்கீழ் அனுமதிக்கப்பெற்று அவற்றிற்குச் சம்பந்தப்பட்ட அமைச்சர்களால் அளிக்கப்பட்ட விவர அறிக்கைகளுடன் பேரவைமுன் வைக்கப்பெற்ற கவன ஈர்ப்பு (1 முதல் 79 வரை)@

8. அரசினர் தீர்மானங்கள்

(அ) பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"சட்டமன்றப் பேரவை விதி 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்தி 2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 8/2005) இன்றே ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

@ *706 முதல் 775 வரையிலான பக்கங்களில் இணைப்பு III-ஆக அச்சிடப்பெற்றுள்ளன.*